செ.வெ.எண்:01 நாள்:01.02.2019

**கரூர் மாவட்டம்**

**கடந்த நிமிடங்களை நினைத்து கவலை கொள்ளாமல், நிகழ்காலத்தில் தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் எதிர்காலத்தின் வெற்றியாளர்களாக நீங்கள் இருப்பீர்கள் - தொழில்நெறி வழிகாட்டி கருத்தரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் பேச்சு**

அதன் விபரம் வருமாறு:

கரூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் சார்பில் தொழில் நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் தலைமையில், தாந்தோணி அரசு கலைக்கல்லூரியில் இன்று(01.02.2019) நடைபெற்றது. இக்கண்காட்சியில் மாணவ-மாணிவிகள் போட்டித்தேர்வை எதிர்கொள்ள வேண்டிய விதம் குறித்த புத்தகங்கள், ஏற்கனவே தமிழ்நாடு அரசுப்பாணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட தேர்வுகளின் வினாத்தாள்கள், தன்னம்பிக்கையூட்டும் புத்தகங்கள் என பல்வேறு தலைப்புகளிலான புத்தகங்ள் இடம்பெற்றிருந்தன.

இந்நிகழ்ச்சியில் கண்காட்சியினை திறந்துவைத்துப் பார்வையிட்டபின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் பேசியதாவது:

மாணவ-மாணவிகள் தங்கள் எதிர்காலத்தை எந்த வகையான வெற்றிப்பாதையில் அமைத்துக்கொள்ளலாம் என்பதை உங்களுக்கு வலியுறுத்தும் நிகழ்ச்சியாகவே இது அமைந்துள்ளது. கடந்த நிமிடங்களை நினைத்து கவலைகொள்ளாமல், நிகழ்காலத்தில் தன்னம்பிக்கையுடனும் - விடாமுயற்சியுடனும் குறிக்கோளை மட்டுமே மனதில் வைத்து செயல்பட்டால் எதிர்காலம் நமக்கு வெற்றியை மட்டுமே பரிசளிக்கும் என்பதை அனைவரும் மனதில் கொள்ள வேண்டும்.

அனைவருக்கும் சம அளவிலான அறிவே இறைவனால் வழங்கப்பட்டுள்ளது. நமது சுற்றுச்சூழலையோ, உறவினர்களையோ, பெற்றோர்களையோ, பொருளாதார நிலையையோ காரணமாக காட்டி நம்மால் வாழ்க்கையில் முன்னனேற இயலாது என்று யாரும் எண்ணக்கூடாது. இன்றைய காலகட்டத்தில் கல்வி அனைவருக்கும் சமமாக வழங்கப்படுகின்றது. நம் மீது நாம் முதலில் நம்பிக்கை வைத்து, நன்றாக படித்து நம்மை தகுதியுள்ளவராக மாற்றிக்கொள்ள வேண்டும். காற்றடைத்த பந்தை எவ்வாறு நீரில் மூழ்கடிக்க முடியாதோ அதே போல தகுதியுடையோரை யாரும் நிராகரிக்க முடியாது. அவர்களுக்கு வரவேண்டிய மரியாதை, வேலை, சமுதாயத்தில் நல்ல மதிப்பு கிடைத்தே தீரும்.

நமது குறிக்கோளை, இலக்கை தினமும் தூங்கி விழித்த முதல் 5 நிமிடங்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும். அதோ போல இரவு தூங்கச் செல்லும் முன் அன்றைய தினத்தில் நாம் செய்த பணிகள் என்ன, நல்ல காரியங்கள் என்ன, நாளை என்னெவெல்லாம் செய்ய வேண்டும் என்பதை மனதிற்குள் எண்ணிப்பார்க்க வேண்டும். மனதில் வேறு எந்த சிந்தனையும் இல்லாது, நமது இலக்கை மட்டுமே நினைத்து ஒரு தவ வாழ்க்கைபோல மிகவும் கட்டுப்பாட்டோடு முயற்சி செய்தால் எளிதில் இலக்கு உங்கள் வசப்படும். தன்னம்பிக்கையுடன் கூடிய விடாமுயற்சியோடு செயல்பட்டால் வெற்றி நிச்சயம்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

பின்னர் தொழில் நெறிகுறித்து வழிகாட்டும் வகையிலான கையேட்டினை மாவட்ட ஆட்சியர் வெளியிட மாணவ-மாணிவகள் பெற்றுக்கொண்டனர். கட்டுரைப்போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ-மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் பரிசுகளை வழங்கிப்பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில் கரூர் லேண்ட் ஐ.ஏ.எஸ் அகாமியைச்சேர்ந்த திரு.அருள்பாண்டி, அரசு கலைக்கல்லூரி பொருளியல் துறை உதவிப்பேராசிரியர் திரு.முகுந்தன், தன்னார்வ பயிலும் வட்டத்தில் படித்து கிராம நிர்வாக அலுவலராக தேர்வாகியுள்ள திரு.முருகானந்தம் ஆகியோர் கருத்தரங்கல் பல்வேறு தலைப்புகளில் உரையாற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியில் அரசு கலைக்கல்லூரி முதல்வர் திரு.ரவிச்சந்திரன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திருமதி.விஜயா, இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் திருமதி.சரண்யா, கரூர் வட்டாட்சியர் திரு.ஈஸ்வரன் உள்ளிட்ட அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.